விலை சதம் 75

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆடி 23 ஷவ்வால் 6 இதழ் 174
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 7-8-1981

எம்மிடம்
வெளி நாட்டில் இருந்து இறக்குமதியான
வெல்டிங் றொட்
தேவையான அளவு பெற்றுக் கொள்ளலாம்.
விபரங்கட்கு:
ராம்ஸன்ஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்
19, ஸ்டான்லி றோட், யாழ்ப்பாணம்
தொலைபேசி; 508

## இராணுவம் இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர், பண்ணையிலுள்ள பொலிஸ் விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளனர். இராணுவ கவச வாகனத்துக்குப் பொறுப்பானவர்கள் மாத்திரம் இங்கு இருக்கின்றனர்.

ஆனைக்கோட்டைப் பொலிஸ்நிலையம் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து இராணுவத்தினர் மேற்படி விளையாட்டரங்கில் முகாமிட்டிருந்தனர். [மா]

# புதிய எதிர்க்கட்சித் தலைவர்: அரசு எம்.பி.க்கள் கோரிக்கை!

## சபாநாயகரை இன்று சந்திக்கின்றார்கள்

(கொழும்பு)

சபாநாயகரை இன்று சந்திக்கும் அரசு தரப்பு பாராளுமன்ற அங்கத்தவர்கள்; புதிய எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரை உடனடியாக நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்க தரப்பைச் சேர்ந்த சுமார் ஐம்பது பாராளுமன்ற அங்கத்தவர்கள் இன்று சபாநாயகர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்காரைச் சந்திப்பார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பாராளுமன்ற ஜனநாயகத்தை மீறுவதால் அவருக்குப் பதிலாக வேறு ஒருவரை உடனடியாக நியமிக்குமாறு சபாநாயகரை அரசு தரப்பு எம். பிக்கள் இன்று கோருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [ம]

## பிரெஞ்சுப் பிரஜைகள் மீது ஈரான் நடவடிக்கை

தெஹ்ரான் ஆக. 6

ஈரானிலிருந்து தாயகம் திரும்புவதற்காகப் புறப்பட்ட 60 பிரெஞ்சுப் பிரஜைகள் தெஹ்ரான் விமான நிலையத்தில் ஈரானிய அதிகாரிகளால் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை ஏற்றிவருவதற்காக பிரான்சிலிருந்து ஈரானுக்கு அனுப்பப்பட்ட விமானமும் ஈரானிய அதிகாரிகளால் அங்காராவிற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

ஈரானின் முன்னாள் ஜனாதிபதி பானிசதாரை ஈரானுக்கு திருப்பியனுப்ப பிரான்ஸ் அரசாங்கம் மறுத்துவருவதைத் தொடர்ந்தே ஈரானிய அரசாங்கம் இத்தகைய நடவடிக்கையை எடுத்துள்ளதாகத் தெரியவருகிறது. [வெ]

விற்பனைக்கு

கம்பி ஆணி
14 wg. 745/- 50 kgs.
மற்றைய அளவுகளில் 715/- 50 kgs.

முள்ளுக்கம்பி "Ideal" Brand
(2 Rolls) மொத்தவிலை 670/- 50 kgs.
சில்லறைவிலை 690/- 50 kgs.

'எஸ்' லோன் பைப்புகள்
½" — 2/25 அடி
¾" — 3/30 அடி
1" — 4/50 அடி

வாஷ் பேசின்
Victory Chinese — 475/-
Armitage Shank — 715/-
Twyfords English — 1000/-

ஸ்குவாட்டிங் பான்
(Squatting Pan, Chinese) — 270/-

போசலின் சிங்க்
(Porcelin Sink Chiniese) — 600/-

லோ லெவல் சூட்ஸ்
(Low Level Suites Complete Set Twyfords English) — 2400/-

மேலும் உங்களுக்குத் தேவையான சகல இரும்புப் பொருட்களுக்கும் கட்டடப் பொருட்களுக்கும் நாடவேண்டிய ஸ்தாபனம்

மஸ்கன்ஸ் லிமிட்டெட்
35, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 8221

## புபேஷ் குப்தா காலமானார்

மாஸ்கோ, ஆக. 6

இந்தியாவின் முதுபெரும் அரசியல் ஞானியும், கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணித் தலைவர்களிலொருவருமான திரு. புபேஷ் குப்தா [66 வயது] மாஸ்கோவிலுள்ள வைத்தியசாலையொன்றில் மாரடைப்பினால் இன்று காலமானார்.

இவரின் மறைவு குறித்து இந்திய ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன், தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி உட்படப் பல அரசியல் தலைவர்கள் அதிர்ச்சியும், ஆழ்ந்த அனுதாபமும் தெரிவித்துள்ளனர். [வெ]

## குட்டிமணியைச் சந்திக்க சட்டத்தரணிகளுக்கு அனுமதி

[கொழும்பு]

'குட்டிமணி' எனப்படும் யோகச்சந்திரனை, அவரது சட்டத்தரணிகள் சந்திப்பதில் தமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று அரசுதரப்பு சட்டத்தரணி திரு. சூரிரத்னபால தெரிவித்துள்ளார்.

'குட்டிமணி இப்பொழுது பனாகொடை இராணுவ முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவரைச் சந்திப்பதற்கு அனுமதி வழங்குமாறு சட்டத்தரணிகள் விடுத்த கோரிக்கைக்கிணங்க குட்டிமணியின் அரசு தரப்பு சட்டத்தரணியான திரு. சூரிரத்னபால; குட்டிமணியை அவரது சட்டத்தரணிகள் சந்திப்பதில் தமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். [ம]

## 'சோ' யாழ். விஜயம்

சென்னை, ஆக. 6

'துக்ளக்' ஆசிரியர் திரு. சோ, இம்மாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்வார்.

தனிப்பட்ட முறையில் இம்மாதம் 21ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள நடிகர் "சோ" கொழும்பு, யாழ்ப்பாணம், நெல்லியடி ஆகிய இடங்களில் நடைபெறும் கலைநிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வார்.

இவர் இலங்கையில் ஒரு வார காலம் தங்கியிருப்பார்.

## அச்சுவேலி கொலை முயற்சி வழக்கு விசாரணை நடுவில் எதிரிகள் விடுதலை

[யாழ்ப்பாணம்]

அச்சுவேலிக் கொலை முயற்சி வழக்கில் விசாரணை நடுவில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜாமில் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் அச்சுவேலியில் 78 செப்டம்பர் 18ம் தேதி தம்பு சித்திவிநாயகம், வேலன் இராசதுரை, முருகன் கதிரன், ம. குகநேசன் சட்டவிரோத கூட்டமொன்றில் உறுப்பினராக இருந்ததாகவும் இ. பாஸ்கரன், சி. தேவராசா ஆகியோரைக் கொலைசெய்ய முயற்சித்ததாகவும், இ. இரத்தினவேலுவுக்கு கடுங்காயம் விளைவித்ததாகவும், குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி திரு. ஆர். சிவநேசனின் உதவியுடன் ஆஜரானார். அரச தரப்பில் சட்டத்தரணி ஐ. தேவராசா, சட்டத்தரணி ஞானதாசன் ஆஜரானார். [க]

## மட்டக்களப்பு அசம்பாவிதம்

[மட்டக்களப்பு]

அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்கள் தொடர்பாக உயரதிகாரிகளின் மகாநாடொன்று நேற்று மட்டக்களப்பு கச்சேரியில் நடைபெற்றது.

மணிவாக்கு

சைவ வாழ்க்கையிலே துன்பத்துக்காயினும், துக்கத்துக் காயினும், கோபத்துக்காயினும், அச்சத்துக்காயினும் இடம்வராது. —சிவபாதசுந்தரனார்.

# நமது நோக்கு

## தீவிரவாதத்தின் தீங்குகள்

உலக அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் சக்திகளில் இன்று அதிகரித்து வரும் வலதுசாரி தீவிரவாதமே முன்னணியில் நிற்கின்றதென்று முன்னைநாள்மேற்கு ஜெர்மன் அதிபர் வில்லி பிரௌன்ட் சரியான எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

தீவிரவாதம் - வலதோ, இடதோ - மட்டுக்கு மிஞ்சி விட்டால் நாட்டுக்கு நட்டத்தை ஏற்படுத்துகிறது. நாடுகளுக்கிடையேயானால் அதன் தீங்குகள் கற்பனை கடந்த நிலையை அடையும்.

அந்நியர்களில் அர்த்தமற்ற வெறுப்பு, பகைமை உணர்வு, கடுஞ்சொல், கொடுஞ்சொல்; துவேஷ மனப்பாங்கு - இவையாவும் வலதுசாரித் தீவிரவாத நோயின் அறிகுறிகள். இவற்றை மாற்றியமைக்க ஜனநாயகக்கல்வி முறை திறம்பட இயங்க வேண்டுமென்பது பிரான்ட் அவர்களின் யோசனையாகும். பெருந்தலைவரின் பேரறிவு நிறைந்த கருத்து இது.

வலதுசாரி தீவிரவாதத்தை முறியடிக்க நாடுகள் தத்தம் சட்ட அமைப்பை ஒருமுகப்படுத்தினால், இந்த அச்சநிலை அகற்றப்படலாமென்றும் அவர் அபிப்பிராயப்படுகிறார்.

எங்கள் நாட்டின் நிலைமையை இந்தக் கூற்றைக் கொண்டு ஆராய்ந்தால், இது பொருத்தமான குறிப்பென்றே கொள்ள வேண்டும்.

பிரதமர் பிரேமதாசா தமது வெளிநாட்டுப் பயணத்தில் கண்ணுற்ற இலங்கை அரசுக்கும், அரச தலைவர்களுக்கும் எதிரான சுலோகங்களைக் குறிப்பிடும் போது, இவை காணப்பட்ட இடங்களில் மேற்கு ஜெர்மன், இங்கிலாந்து தூதரகங்களைக் குறிப்பாக கண்டித்திருக்கிறார்.

இச்சமயம, லண்டனில் அவர் அளித்த பேட்டியில், இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதுவித பாகுபாடும் காட்டப்படவில்லையென்பதை உறுதிப்படுத்த லண்டன், பொன், பாரிஸ் தூதர்கள் இலங்கைத் தமிழர்களே என்ற உதாரணத்தை உடனடியாக வழங்கினார்

இன்று உருவாகும் பிணக்கு நிலை இதற்கு மாறானது போல் தெரிகிறது. இந்த தூதரகங்களின் தலைவர்கள் திறமை, சேவை மூப்பு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்கள். இவர்கள் தமிழர்களாகவும் அரசின் விசுவாசத்துக்குரியவராகவும் இருக்கிறது பெருமகிழ்ச்சிக்குரிய விடயம்.

பல்கலைக்கழக அனுமதித் திட்டம் போன்ற பாகுபாடான திட்டம் இங்கும் செயற்பட்டால் நிலைமை என்னவாயிருக்கும்?

எனவே செவ்வனே நிர்வகிக்கப்படும் இத்தூதரகங்களின் செயறதிறமை சந்தேகத்துக்குரியதல்ல. அதனை மறந்து இங்கு நடைபெறும் கண்டனங்கள். முன்னைநாள் மேற்கு ஜெர்மன் அதிபரின் கூற்றுக்குச் சான்று பகர்கின்றன.

லண்டன் தூதரகத்தின் சுவர் ஒன்றில் காணப்பட்ட சுலோகம் ''இலங்கையின பாசிச தூதரகம்'' இது ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் விஜயத்தையொட்டியது. ஆட்சியாளரின் முழு விசுவாசத்தைப் பெற்றிருக்கும் தமிழ்த்தூதர் அதற்கு எவ்வகையிலும் பொறுப்பாயிருக்க மாட்டாரென்பது சொல்லாமலே புரியும்! இந்தச்சுலோகம் நியாயமானதா என்பதே முக்கியம்

பின்னே நிகழக்கூடிய கேடுகளை முன் எச்சரிக்கை கொடுக்கும் தெய்வாதீனச் செயலை ஆங்கிலத்தில் 'Writing on the wall' சுவரில் எழுத்து - என்று சொல்வது ஆங்கில மரபு. அதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு நாட்டில் பாசிச போக்கு ஒன்று உருவாகிறதால் அதனை முறியடிப்பதே விவேகமான செயல் சர்வாதிகாரம் மக்கள் ஆட்சிக்கு நேர்மாறானது

பாராளுமன்றத்தில் நடைபெறும் ஆராய்ச்சிகள் விஜயன் கள்ளத்தோணியா? யார் இலங்கைக்கு முதல் வந்தவர்கள் சிங்களவர்களா தமிழர்களா? 'சிங்கள தமிழ் இரத்தத்தின் வேறுபாடுகள் போன்ற ஒருதலை வாதம் இவை இந்தப்பாணியில் அரசாங்க எம்பிக்களின் மனோநிலையைக் குறிக்குமாயின் இது தீவிரவாதமல்லவா? வலதா, இடதா என்பது சந்தேகத்துக்குரியதல்ல.

அடுத்த வரவு செலவுதிட்டத்தை நினைக்கவே நிதி அமைச்சர் ரொனி டி மெல் அவர்களுக்கு நடுக்கம் பிடிக்கின்றது. மூன்று அமெரிக்க தனியார் வங்கிகளிடம் 7 கோடி, 50 லட்சம் டொலர் கடன் வாங்கியே இவ்வருட வரவு செலவுத் திட்டத்தின் இடைவழியை நிரப்பலாமென விசனிக்கின்றார்.

வருடாவருடம் துண்டு விழும் தொகை நாட்டையே விழுங்கிவிடுமோவென்று அஞ்சும் நிலையில் மக்கள் பிரதிநிதிகள்- தீவிரவாதிகள் வடக்கிலும் தெற்கிலும் நெருப்புடன் விளையாடுகின்றனர்.

மாவட்ட அபிவிருத்திச் சபை ஒரு ஆறுதலளிக்கும் சாதனமென்றால் மத்திய அரசு செவ்வனே நடைபெற வேண்டும்; அப்போதுதான் வெற்றிகரமாகக் கடமைகளை நிறைவேற்ற முடியும், ஆண்டிகள் மடம்கட்ட முடியுமா?

எந்த அடிப்படையிலும் அன்றாட வாழ்க்கையில் சமாதான உணர்வு நிலவினாலொழிய தீவிரவாதம் நாட்டையும் நம்மையும் குட்டிச் சுவராக்கிவிடும்.

## பொன்னாலை வரதராஜப் பெருமாள் மஹோற்சவம்

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தான மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்

இம்மாதம் 23ம்திகதி தேர்த் திருவிழாவும் 24ம் திகதி தீர்த்தத்திருவிழாவும், 25ம் திகதி சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளது.

திருவிழாநாட்களில் தினமும் இரவு பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்தசர்மாவின் ''பக்தவிஜயம்'' இன்னிசை விரிவுரை நடைபெறும்.

# 'ஈழநாடு' எரித்ததுபற்றி 'கார்டியன்' ஏட்டில் செய்தி

''மாவட்ட அபிவிருத்திச் சபைத்தேர்தல் நடப்பதற்கு ஒரு கிழமைக்கு முன்பதாக அரசாங்கம் 500 மேலதிக பொலிசாரை தேர்தல் காலத்தில் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தது. துருப்பினரும் தயாராக வைக்கப்பட்டிருந்தனர். அதுவரையில் பிரசார வேலைகள் மிகவும் ஒழுங்காகவே இருந்துள்ளன. ஆனால் அரச படைகளின் வருகையுடன் மிக வேகமாக வன்செயல்கள் ஆரம்பமாகின.

இவ்வாறு பிரிட்டிஷ் பத்திரிகையான கார்டியனில் அதன் விசேஷ நிருபர் ஜேம்ஸ் பியார்ட் எழுதியுள்ளார். சில வாரங்களுக்குமுன் இலங்கைக்கு வந்து திரும்பியுள்ள திரு. பியார்ட் யாழ்ப்பாணசம்பவங்கள்பற்றியும் 'ஈழநாடு' கட்டிடம் எரிக்கப்பட்டதுபற்றியும் விரிவான தகவல்களை ஜூலை 22ம் திகதிய கார்டியன் பத்திரிகையில் எழுதியுள்ளார்

இலங்கையின் வடபகுதியில் தமிழ் இனத்தவர்களின் முக்கிய நகரமான யாழ்ப்பாணத்திலிருந்து 'ஈழநாடு' பத்திரிகை வெளிவருகின்றது.

1970ம் ஆண்டிலிருந்து தமிழர்கள் வடபகுதிக்கு சிங்களப் பெரும்பான்மை இனத்தவர்களின் கட்டுப்பாட்டிலிருந்து குறிப்பாக அவர்களின் கொடுமைகளிலிருந்து விடுபட்ட தனிநாடு ஒன்றைக் கோரிவருகிறார்கள். பிரிவினை கோரும் முக்கியகட்சியான தமிழர் விடுதலைக்கூட்டணி தமிழ்ப்பகுதிகளில் தொடர்ந்து வாக்குகளை வென்றெடுக்கும் கட்சியாக இருந்து வருகின்றது. இலங்கைப் பாராளுமன்றத்திலும் இக்கட்சியே இரண்டாவது பெரியகட்சியாக இருந்து வருகின்றது.

சிங்களவர்களால் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்று தமிழர்கள் கூறுவதை கடந்த மாதம் ஆரம்பகாலத்தில் உறுதிப்படுத்தும் விதத்தில் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று திரு. பியார்ட் தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்

மே 31ம் திகதி இரவு பொலிசார் யாழ்நகரில் வெறித்தனமாக செயல்பட்டுள்ளார்கள். வீடுகள், கடைகளை எரித்து கொள்ளைகள் நடத்தியுள்ளனர் உள்ளூர் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் வீடு, த. வி. கூட்டணி காரியாலயம் ஆகியவையும் சாம்பலாக்கப்பட்டன. அடுத்தநாள் இரவும் பொலிசார் தமது அழிவு வேலைகளை நடத்தியுள்ளனர். யாழ். நகர பொது நூலகம் அதன் 95000 புத்தகங்கள் நகரின் பழைய சந்தை மற்றும் 2 கடைகள் ஆகியவையும் எரிக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டுள்ள திரு. பியார்ட், எதிர்க்கட்சித்தலைவரும் ஏனைய எம். பிக்களும் கைது செய்யப்பட்டதபற்றியும் பலர் சுட்டுத்தள்ளப்பட்டதபற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

300 மைல்களுக்கப்பாலுள்ள கொழும்பிலிருந்து வெளிவரும் ''சிறிலங்காவின் ஏனைய பத்திரிகைகள் யாழ்ப்பாணச் சம்பவங்கள்பற்றி மிகச் சொற்பமான விபரங்களையே வெளியிட்டன. இவைகளில் அநேகமானவை அரச கட்டுப்பாட்டிலுள்ளவை. 'ஈழநாடு' ஸ்த

[6ம் பக்கம் பார்க்க]

GUARDIAN (22 - 07-81)

PRINTS FROM THE SINHALESE ASHES

[மேற்படி தலைப்பிலேயே இச்செய்தி வெளிவந்திருந்தது]



## இன்று நல்லூர்க் கந்தன் 3-ம் திருவிழா

சேல்பட்டழிந்தது செந்தூர்
வயற் பொழில்
தேங்கடம்பின்
மால் பட்டழிந்தது
பூங்கொடியாள் மனம்
மாமயிலோன்
வேல்பட்டழிந்தது வேலையும்
சூரனும் வெற்புமவன்
கால் பட்டழிந்ததிங் கென்றலை
மேலயன் கையெழுத்தே.

—அருணகிரிநாதர்


உங்கள் வைப்புத் தொகைக்கு உயரிய வருமானம் உறுதியான பாதுகாப்பு

22% வரை வருட வருமானம் பெறும் 1 வருட சேமிப்புத் திட்டம்.

27% வரை வருட வருமானப் பெறும் 2 வருட சேமிப்புத் திட்டம்.

மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்

இலங்கையில் அதி பெரியதும் உறுதிவாய்ந்ததுமான ஓர் நிதி நிறுவனம்.

மாதாந்தமோ முதிர்ச்சியின் பின்னரோ வருமானம் செலுத்தப்படக் கூடிய திட்டங்களைக் கொண்டது.

பாரிய அளவிலான மூலவளங்களைக் கொண்ட நிறுவனம்

மொத்த ஆதனம் ரூபா 32 கோடிக்கும் மேல் மூலதனமும் ஒதுக்கீடுகளும் ரூபா 4 கோடிக்கும் மேல்

பொது மக்களின் நம்பிக்கையைப் பெற்று மகிழும் நிறுவனம்.

6500 க்கும் அதிகமான வைப்பாளருடன் ரூபா 17 கோடியே 5 லட்சத்திற்கும் மேலான தொகையினை வைப்புப்பணமாகக் கொண்டது.

மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்

51, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 1. தொலைபேசி: 26611 - 8.

கிளைகள்:

யாழ்ப்பாணம் : 11/8 ஸ்ரான்லி றோட். தொலைபேசி: 321
மாத்தறை : 27 1/1 தர்மபால மாவத்தை. தொலைபேசி: 2466
அனுராதபுரம் : 2. ஹரிஷ்சந்திர மாவத்தை. தொலைபேசி: 534
கண்டி : 115, (1ம் மாடி) கொட்டுகொடல வீதி. தொலைபேசி: 4196

செயற் துணைவர்கள் (ஏஜெண்டமார்) எல்லா முக்கிய நகரங்களிலும் உள்ளனர்

''மேலதிக விபரங்களுக்கு எமது யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்தை நாடவும்

MASTERS

## கிழக்கு மாகாணத்துக்கு
# விசேஷ பொலிஸ்-ராணுவம் அனுப்பப்பட்டது

(கொழும்பு)
கிழக்கு மாகாணத்திற்கு விசேட பொலிஸ், இராணுவ அதிரடிப்படைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியை அடுத்து கிழக்கு மாகாணத்தில் நிலவிவரும் பதட்டநிலை பாதுகாப்புப்படைகளின் தீவிர ரோந்து நடவடிக்கைகளால் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

இவ்விளையாட்டுப் போட்டியை அடுத்து நான்கு மாணவர்கள் காயமடைந்ததுடன், ஒரு பெற்ரோல் தாங்கிவண்டி உட்பட பல பஸ் வண்டிகளும் கல்லெறிகளுக்கும் தாக்குதல்களுக்கும் உள்ளாகியுள்ளன.

இது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் பாண்டிருப்புப் பகுதியைச் சேர்ந்த ஐந்துபேர் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

அசம்பாவிதங்கள் விரிவடையாது மட்டக்களப்பு மாவட்டத்தின் பஸ்நிலையம், சந்தை, தபால் நிலையம் மற்றும் பாடசாலை நிலையங்களிலும் பாதுகாப்புப்படைகள் நிறுத்தப்பட்டுள்ளன. பாதுகாப்பு நடவடிக்கைகள் யாவற்றையும் பொலிஸ் அத்தியட்சகர் திரு. எஸ். ஜி. ரந்தெனியா நேரடியாகக் கவனித்து வருகின்றார்.

## திருட்டு

[பண்டத்தரிப்பு]
மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மானிப்பாய்க் கிளை, நள்ளிரவு நேரத்தில் கதவு உடைக்கப்பட்டுச் சுமார் 4 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன. (க)

## கூட்டுறவு விழா

[யாழ்ப்பாணம்]
சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா இன்று பூநகரியில் நடைபெறவிருக்கிறது.

இலங்கை தேசிய கூட்டுறவு சமாசத்தின் உபதலைவரும், பூநகரி ப.நோ. கூ. ச. தலைவருமான திரு.ரி இராசநாயகம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் மாவட்டசபைத் தலைவர் திரு. சு. நடராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். [மா]

## பூநகரியில்
# துணிகரக் கொள்ளை: கணவன்-மனைவி படுகாயம்

(கிளிநொச்சி)
இனம் தெரியாத ஒரு கொள்ளைக் கோஷ்டி நள்ளிரவில் வீடொன்றுக்குள் புகுந்து வீட்டிலிருந்தவர்களைப் படுகாயப்படுத்தி சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இத்துணிகரக் கொள்ளை பூநகரியிலுள்ள செட்டியகுறிச்சி என்னுமிடத்தில் நிகழ்ந்துள்ளது.

கொள்ளையர்களால் காயப்படுத்தப்பட்ட கணவனும் மனைவியும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொள்ளையரால் தாக்கப்பட்ட பூநகரி கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றும் அரியரத்தினம் என்பவர் கிளிநொச்சி பொலிசில் செய்துள்ள புகாரில் நள்ளிரவு நேரம் வீட்டை உடைத்து உட்புகுந்த இனம் தெரியாத ஆயுதம் தாங்கிய கொள்ளைக் கோஷ்டி தங்களைத் தாக்கி விட்டு அறைக்குள் பெட்டிகளை உடைத்து அதற்குள் இருந்த சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும், வானொலிப் பெட்டி, மணிக்கூடு ஆகியவற்றையும் கொள்ளையடித்துச் சென்றதாக தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பிரேமதாசா, சார்ஜன்ட் திரு. இ திருவிளங்கம, கான்ஸ்டபிள்கள் திரு பி. விநாயகமூர்த்தி, திரு. செல்வநாயகம் ஆகியோர் கொள்ளை நடைபெற்ற இடத்திற்கு சென்று பார்வையிட்டு தீவிர புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனைக்கோட்டை பொலிஸ் நிலைய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்துப் பூநகரிப் பொலிஸ் நிலையம் மூடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (சா)

## கம்பர்மலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்:
# ஆறு சந்தேக நபர்களும் நீதவான் முன் சரண்!

[புலோலி]
ஆறுபேரைப் பலிகொண்ட கம்பர்மலை துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக பொலிசாரால் தேடப்பட்டுவந்த ஆறு பேரும் நேற்று பருத்தித்துறை நீதிபதி திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் சரணடைந்தனர்.

இ. அப்புத்துரை, வே.மகேந்திரன், இ. தங்கராசா, இ. தேவராசா, இ. துரைராசா, சி. தில்லைநடராசா ஆகியோர் நேற்று சட்டத்தரணி திரு. என். கிருஷ்ணராசா மூலம் சரணடைந்தனர்.

கடந்தமாதம் உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள கம்பர்மலை என்ற கிராமத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின் போது ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த 3 பெண்கள் உட்பட 6 பேர் பலியாகியது தெரிந்ததே.

இச்சம்பவம் தொடர்பான மரணவிசாரணை நடைபெற்று வருகிறது.

சந்தேக நபர்கள் 6 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். [இ]

## ஈழநாடு...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

லத்திலேயே உள்ள பத்திரிகை. அரசாங்கக் கட்டுப்பாட்டிலிருந்து சுதந்திரமாக செயல்படுவது. அதனால் அதன் வாசகர்களுக்குச் சிறந்த சேவையளிக்கக்கூடிய ஒரு தனித்துவமான நிலையிலிருக்கின்றது" என்று குறிப்பிட்டுள்ள 'கார்டியன்' நிருபர், மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஜூன் முதலாம் திகதிய அதன் பதிப்பில் முதல் நாள் நடைபெற்ற சம்பவங்களை 'ஈழநாடு' வெளியிட்டிருந்ததோடு அடுத்த நாள், மேலும் அதிக செய்திகளை வெளியிடுவதாக அறிவித்திருந்தது. ஆனால் அன்றைய இரவு 'ஈழநாடே' தாக்குதலுக்குள்ளாகியது. அன்று 9-30 மணியளவில் பொலிஸ் கோஷ்டியொன்று அந்தப் பத்திரிகைக் கந்தோருக்குள் புகுந்து அங்குள்ள ஊழியர்களைத் துரத்தியிருக்கிறார்கள் என்றும் 'ஈழநாடு' காரியாலயம் தீக்கிரையாக்கப்பட்ட சமயம் அங்கு கடமையாற்றும் சிலர் காயமடைந்தது பற்றியும் இப்பத்திரிகை நடுநிலைமையில் நின்று செய்திகளை வெளியிடுவதுபற்றியும் திரு. பியார்ட் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

எரிக்கப்பட்ட நான்காம் நாளன்றே ஈழநாடு மீண்டும் வெளிவரத்தொடங்கியதை திரு. பியார்ட் முக்கியமாகக் குறிப்பிட்டுள்ளதோடு. இப்பத்திரிகை மிகப்பழமையான நுட்ப முறைகளை கையாண்டு பழைய யந்திரங்களின் உதவியுடன் வெளிவருவதையும் குறிப்பிட்டுள்ளார்.

## நல்லை ஆதீனத்தில் சுந்தரர் குருபூசை

[யாழ்ப்பாணம்]
சுந்தரர் குருபூசை இன்று நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. பகல் 12-30 மணிக்கு அன்னதானமும் மாலை உற்சவமும் பண்ணிசைக் கச்சேரியும் நடைபெறும்.

ஃ ஃ ஃ

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டுத் தினமும் நல்லை ஆதீன மண்டபத்தில் மகாசமாதி எய்திய நல்லைக் குருமணியின் "மகாபாரதம்" ஒலிப்பதிவு நாடாமூலம் பி. ப. 4 மணி தொடக்கம் 5-15 மணிவரை ஒலிபரப்பப்படும்.

## இன்று ரஷ்யா செல்கின்றனர்

[கொழும்பு]
சோவியத்யூனியனிலுள்ள லுமும்பா பல்கலைக்கழகத்தின் புலமைப்பரிசில் பெற்ற 15 இலங்கை மாணவர்கள் இன்று சோவியத்யூனியனுக்குப் பயணமாகிறார்கள். [இ]

# மனைவி மீது சந்தேகம்? கணவன் தற்கொலை

[புலோலி]
மனைவிக்கு வேறொரு ஆசை நாயகன் இருப்பதாக சந்தேகம் கொண்ட கணவன் தன் உடம்பின்மீது தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டித் தனதுயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

கடற்கரைவீதியைச் சேர்ந்த செல்லையா செல்வராசா [24 வயது] என்பவரே தனது உயிரை மாய்த்துக் கொண்டவராவர்.

மரண விசாரணையின்போது; குடும்பத்தில் சச்சரவுமுண்டதாகவும் மனைவி வேறொரு இளைஞனுடன் தொடர்பு வைத்திருப்பதை அறிந்து மது அருந்தத் தொடங்கியதாகவும் இச்சந்தர்ப்பத்தில் மனைவி கர்ப்பம் தரிக்கவே கணவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டு காலஞ்சென்றவர் தனக்குத்தானே எண்ணெய் ஊற்றிக் கொளுத்தி விட்டு நெருப்பின் கொடுமை தாங்காது கத்திக்கொண்டு வீதியால் ஓடத் தொடங்கியதாகவும் அயலவர்கள் இவரைமந்திகை ஆசினர் வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும், அவர் ஆஸ்பத்திரியில் இறந்தாரென்றும் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவரின் மனைவி மற்றில்டா போலின் என்பவரும் வேறு சிலரும் சாட்சியமளித்தனர். மரணவிசாரணையை மேற்கொண்ட உத்தியோகப்பற்ற நீதவானும், சட்டத்தரணியுமான தருமதி அர்ச்சுன தற்கொலையென்று தீர்ப்பளித்தார்.

# தாலிக்கொடி திருட்டு: இளைஞருக்கு விளக்கமறியல்

[யாழ்ப்பாணம்]
நல்லூர் கந்தசுவாமிகோவில் கொடியேற்ற உற்சவத்தின் போது தாலிக்கொடி அறுத்தது சம்பந்தமாக கைதுசெய்யப்பட்ட கந்தசாமி சுப்பையா என்ற இளைஞர் யாழ். நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டபோது குற்றத்தைஒப்புக் கொண்டதையடுத்து நீதவான் திரு. ரி. ஜோக்நாதன் எதிரியை இம்மாதம் 24ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் கொடியேற்ற உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது கொககுவில் கிழக்கைச் சேர்ந்த இராசையா கனகம்மா என்பவாது தாலிக்கொடியை, சுன்னாகம் புகையிரதநிலைய வீதியைச் சேர்ந்த கந்தசாமி சுப்பையா என்பவர் அறுத்துக் கொண்டோடியபோது இளைஞர் ஒருவரால் பிடிக்கப்பட்டு நல்லூர்ஆலய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் சிறீதரனிடம் ஒப்படைக்கப்பட்டது தெரிந்ததே.

அவரது கையடையாளங்களைப் பதிவு செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டார். [மா]

## மத்தியசெயற்குழு கூடுகிறது

[கொழும்பு]
தமிழர் விடுதலைக் கூட்டணியின மத்திய செயற்குழு இன்று கூடுகிறது.


# மிகவும் குறைந்த விமானக் கட்டணத்தில்

ஃ மத்தியகிழக்கு ஃ சிங்கப்பூர்
ஃ பாரிஸ் ஃ நைஜீரியா
ஃ லண்டன் ரூபா 7,500-00 (ஒருவழி)
ரூபா 14,205-00 (இருவழி)

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும்
## உலகின் எப்பாகத்துக்கும்

• எவ்வித கூடுதல் கட்டணமுமின்றி நீங்கள் விரும்பிய விமானத்தில் பிரயாணஞ் செய்வதற்குரிய
## விமான டிக்கட்டுகள்

வங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரயாணக் காசோலைகள்

★ நைஜீரியன் விசா

ஆகியவற்றை கொழும்பு செல்லாமல் யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ள பிரபல்யமான
MACKINNON, MACKENZIE & Co. of CEYLON LIMITEDன்
ஒரேயொரு யாழ்ப்பாணக் கிளையான எங்களை நாடுங்கள்

# மக்கினென்ஸ் ட்றவல் சேவிஸ் (சிலோன்) லிமிட்

8, பருத்தித்துறை வீதி, - யாழ்ப்பாணம்.
த. பெ. எண் 92 தொலைபேசி: 8154



சுதுமலை ஈஞ்சடி ஞானவைரவர் கோவில் திருப்பணி நிதிக்காக
# திருமதி U. R. ஜீவரத்தினம்
அவர்களின்
# இன்னிசைக் கச்சேரி
8-8-81 சனிக்கிழமை மாலை 6-30மணிக்கு
யாழ்.திவ்யஜீவனசங்கமண்டபத்தில்
நடைபெறும்
பிரவேசம் ரூபா 10-00 ஆசனம் கம்பளம்
0544


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்பண்ணை வீதி, 63ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாடு' லிமிடெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஜூலை ஆகஸ்ட் 7ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post office; Sri Lanka. Regd. Q B 100236/81. P. O. Box 49, Jaffna. தொலைபேசி; 7707, 389, 8126.